## குடியேற்றமும் போதைவஸ்திற்கு அடிமையாதலும்

Contact Netz இனுடைய குடியேற்றமும் போதைவஸ்திற்கு அடிமையாதலும் (Migration und Sucht) என்னும் வேலைத்திட்டம் இடப்பெயர்வைப் பின்னணியாகக் கொண்ட, போதைவஸ்து பிரச்சனைகளை உடைய தனிநபர்களிற்கும், குடும்பங்களிற்கும் உரியது.

இடப்பெயர்வைப் பின்னணியாகக் கொண்ட மக்களின் போதைவஸ்து தொடர்பான பல்வேறு எங்கள் சேவைகளைப் பெறுவதில் உள்ள தயக்கத்தைக் குறைப்பதே இவ்வேலைத்திட்டத்தின் நோக்கமாகும். எனவே உதாரணமாக ஆலோசனைகள் தாய்மொழி பேசுபவர்களால் அல்லது மொழிபெயர்ப்பாளர்களினால் வழங்கப்படும். இங்கு பணியாற்றுபவர்கள் இடப்பெயர்வை தாமே அறிந்திருப்பர் அல்லது விசேடமாக இதையிட்டுக் கற்றிருப்பர். அத்துடன் வெளிநாட்டவர் சமுதாயத்துடன் நெருங்கி, இணைந்து செயலாற்றுவதும் எங்கள் விருப்பமாகும்.

## இளம்வயதினருக்கும், பெற்றோருக்குமான போதைவஸ்து தொடர்பான ஆலோசனைகள்

பேர்ண், முன்சிங்கன், தூண், இன்ரலாகன், பீல், பூர்க்டோவ், லங்கன்தாள் மற்றும் லங்கனவ் ஆகிய இடங்களில் உள்ள ஆலோசனை நிலையங்கள் இளம்வயதினருக்குரிய போதைவஸ்துகள் தொடர்பான விடயங்களையிட்ட பின்வரும் தகவல்களை வழங்குகின்றன: வேலைத்தளத்தில், வசிப்பிடத்தில் மற்றும் ஓய்வுநேரத்தில் உதவிகள் மற்றும் போதைவஸ்துப்பழக்கத்தில் இருந்து விடுபடுதலும் குணப்படுத்தலும். நாங்கள் இளம்வயதினருக்கும் அவர்களின் உறவினருக்கும் தனிப்பட்ட முறையில் போதைவஸ்துக்கள் தொடர்பான பிரச்சனைகள், குடும்பத்தில், வேலைத்தளத்தில் மற்றும் பாடசாலையில் உள்ள சிக்கலான சூழ்நிலைகளையிட்ட ஆலோசனைகளை வழங்குகின்றோம். நாங்கள் மெதடோன் (Methadon) பாவிப்பவர்களையும் மற்றும் இச்சையடக்கும் முறைகளைக் கடைப்பிடிக்கும் நபர்களையும் வழிநடத்துகின்றோம். பேர்ணில் குடியேறிய குடும்பங்களுடன் வழிநடத்தலுடன் கூடிய கருத்துப்பரிமாற்றம் செய்ய ஒரு குழு அமைக்கப்படும். இதில் ஆர்வமுள்ளவர்கள் அனைத்துப் பிரதேசங்களில் இருந்தும் வரவேற்கப்படுகின்றனர்.

வேலைத்திட்டம் - குடியேற்றமும்
போதைவஸ்த்திற்கு அடிமையாதலும்

## உளவியல்சிகிச்சை, கணவன் மனைவி மற்றும் குடும்பசிகிச்சை

உளவியல்சிகிச்சை விளக்கங்களையும், ஆலோசனைகளையும் அல்லது இத்துடன் தனிநபர்களுக்குரிய நீண்டகால உளவியல் ரீதியான குணப்படுத்தும் முறைகளையும் வழங்கும். கணவன் மனைவியிடையே அல்லது குடும்பத் தொடர்பில் ஏற்படும் சிக்கல்களுக்கு கணவன் மனைவி மற்றும் குடும்பசிகிச்சை ஆலோசனைகள், குணப்படுத்தும் முறைகளினூடு உதவி வழங்கும்.

## Prisma – விருந்தினர் குடும்பத்தில் போதைவஸ்துசிகிச்சை

Prisma என்பது பேர்ணிலுள்ள, இச்சையடக்கும் வழிமுறையைக் கைக்கொண்டு வெளியில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் சேவை. இது போதைவஸ்துப் பிரச்சனைகளை உடைய வளர்ந்தோருக்கும், இளம்வயதினருக்கும் உரியது. சிகிச்சை பெறுபவர்கள் விருந்தினர் குடும்பத்தில் தங்கி வசிப்பர் மற்றும் இத்தங்கியிருக்கும் காலத்தில் இவர்கள் சிகிச்சையளிப்பவர்களினால் வழிநடத்தப்பட்டு ஆலோசனை வழங்கப்படுவர்.

## பாடசாலை வேலைத்திட்டங்கள்

பேர்ணிலுள்ள பாடசாலை வேலைத்திட்டங்கள் கல்வியறிவு குறைந்த மக்களுக்கு தனித்தனியாக அல்லது சிறு குழுக்களாக பல்வேறு பாடங்களைக் கற்பிப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட சேவையை வழங்கும்.

## தொடர்பு மற்றும் புகலிட மையங்கள்

பீல் மற்றும் பேர்ணிலுள்ள தொடர்பு மற்றும் புகலிட மையங்கள் போதைவஸ்த்து பாவிக்கும் நபர்களின் உடல் ஆரோக்கிய பாதிப்புகளையும், சக பாதிப்புகளையும் குறைப்பதுடன், போதைவஸ்துக்கு அடிமையான மக்களின் வாழ்க்கைக்கு பாதுகாப்பளிக்கும்.

வேலைத்திட்டம் - குடியேற்றமும்
போதைவஸ்த்திற்கு அடிமையாதலும்

## மெதடோன் (Methadon) சிகிச்சைநிலையம்

பேர்ணிலுள்ள மெதடோன் சிகிச்சைகள், போதைப்பொருட்களை உட்கொண்டு மயக்கத்திற்கு கட்டுப்பட்டு வாழ்பவர்களுக்கு, வைத்தியர்களால் பிரதிப் பொருளாக மெதடோன் எழுதிக் கொடுக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படும் ஓர் முறை.

## வேலையும், இணைந்து வாழும் திட்டங்களும்

Contact Bern மற்றும் Contact Thun இன் வேலையும் இணைந்து வாழும் திட்டங்களும் போதைவஸ்திற்கு அடிமையானவர்களிற்கு பாதுகாப்பான, தயக்கமில்லாத வேலைவாய்ப்புகளைப் பெற்றுத்தரும் சேவையைக் கொண்டது. பொதுவாக தினஊதியம் வழங்கப்படும்.

## வதிவிடம் வழங்கல்

பேர்ணிலுள்ள WODREBE உம் பூர்க்டோர்விலுள்ள வதிவிட உதவியும் போதைவஸ்திற்கு அடிமையானவர்களிற்கு அறைகளையும், வீடுகளையும் வாடகைக்கு வழங்குவதுடன், வாடகையில் இருக்கும் இவ்வேளையில் வழிநடத்தவும் செய்வர்.

## அமைப்புமுறை

ஆலோசனையும், தகவல்வழங்கலும் இலவசம். உளவியல் சிகிச்சைகள் ஒரு பகுதி மருத்துவக் காப்புறுதியில் பெறப்படலாம். இங்கு பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களும் இரகசியம் பாதுகாக்க கடமைப்பட்டவர்கள். கதைப்பதற்கான நேரம் பொதுவாக தொலைபேசிமூலமுன்பதிவு செய்யப்படும்.

மேலதிக தகவல்களும், Contact Netzஇன் சேவைகளிற்குரிய சரியான முகவரிகளும் www.contactnetz.ch என்னும் இணையத்தள முகவரியில் அல்லது அல்லது நேரடியாக உரிய இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## Contact Netz இன் சேவைகளை பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்:

## Angebote des Contact Netz finden Sie in:

**Contact Bern**
Monbijoustr. 70, PF
3000 Bern 23
Tel. 031 378 22 22
Contact.bern@contactmail. ch

**Contact Biel Bienne**
Obergässli 15, PF 1061
2501 Biel
Tel. 032 323 61 51
info.biel-bienne@contactmail.ch

**Contact Thun**
Scheibenstrasse 3
3600 Thun
Tel. 033 225 21 21
Contact.thun@contactmail.ch

**JBO**
Schulhausstrasse 5
4900 Langenthal
Tel. 062 922 26 44
jbo.langenthal@contactmail.ch

**Contact Interlaken**
Rugenparkstrasse 17
3800 Interlaken
Tel. 033 823 23 88
Contact.interlaken@contactmail.ch

**Judro**
Bahnhofstrasse 59
3400 Burgdorf
Tel. 034 422 02 01
judro.burgdorf@contactmail.ch

வேலைத்திட்டம் - குடியேற்றமும்
போதைவஸ்திற்கு அடிமையாதலும்

## நடத்துனரும் பொருளாதாரமும்

குடியேற்றமும் போதைவஸ்திற்கு அடிமையாதலும் என்னும் வேலைத்திட்டம் Contact Netz இனால் நடாத்தப்படும். Contact Netz இன் சுகாதார மற்றும் பிரத்தியேக பங்கு இலாகாவிற்கு (Bundesamt für Gesundheit und Eigenleistungen des Contact Netz) பேர்ண்மாநில சுகாதார-பொதுநலத்துறையினால் (Gesundheits- und Fürsorgedirektion des Kantons Bern) மூன்று வருடங்களிற்கு (2001-2004) நிதியுதவி அளிக்கப்படும்.

**Migration und Sucht**
Monbijoustr. 70, PF
3000 Bern 23
Tel. 031 378 22 22
Contact.bern@contactmail.ch

www.contactnetz.ch

வேலைத்திட்டம் - குடியேற்றமும்
போதைவஸ்திற்கு அடிமையாதலும்



CONTACT
BERNER GRUPPE FÜR JUGEND-, ELTERN- UND SUCHTARBEIT
NETZ

Tamilisch